රාජ්‍ය පරිපාලන, කළමනාකරණ සහ නීතිය හා සාමය පිළිබඳ අමාත්‍යාංශය
அரச நிருவாக முகாமைத்துவ மற்றும் சட்டமும் ஒழுங்கும் பற்றிய அமைச்சு
MINISTRY OF PUBLIC ADMINISTRATION, MANAGEMENT AND LAW & ORDER

ඒකාබද්ධ සේවා අංශය | இணைந்த சேவைகள் பிரிவு | COMBINED SERVICES DIVISION

නිදහස් චතුරශ්‍රය, කොළඹ 07, ශ්‍රී ලංකාව. சுதந்திரச் சதுக்கம், கொழும்பு 07, இலங்கை. Independence Square, Colombo 07, Sri Lanka

දුරකතන தொலைபேசி:**(94) 011- 2694560** Telephone
ෆැක්ස් தொலைநகல்:**(94) 011- 2692254** Fax
ඊ-මේල් மின்னஞ்சல்:**dgcs@pubad.gov.lk** E-mail
වෙබ් අඩවිය இணையத்தளம்: **www.pubad.gov.lk** Web Site

මගේ අංකය / எனது இல / My No: CS/DOS/06/පොදු
ඔබේ අංකය / உமது இல / Your No:
දිනය / திகதி / Date: 2018.05.24

அமைச்சுக்களின் செயலாளர்கள்
திணைக்களத் தலைவர்கள்
மாவட்டச் செயலாளர்கள்
பிரதேச செயலாளர்களுக்கு

**அரசாங்க சேவைகள் ஆணைக்குழு சுற்றறிக்கை இலக்கம் (1)2011/2 இற்கு ஏற்ப வினைத்திறன் காண் தடைப் பரீட்சையில் ஆங்கிலப் பாடத்தினை விடுவிப்பதற்கான கோரிக்கை**

01. அபிவிருத்தி உத்தியோகத்தர் சேவையினுள் உள்ளீர்க்கப்பட்ட அலுவலர்களை அவ் உள்ளீர்ப்பிற்கு முன்னாலான ஆட்சேர்ப்பில் நடைமுறைப்படுத்திய ஆட்சேர்ப்புத் திட்டத்தின் கீழ் முதலாம் வினைத்திறன் காண் தடைப் பரீட்சையில் ஒரு பாடமாக ஆங்கிலப் பாடத்தினை உள்ளடக்குவதன் அடிப்படையில், இதுவரையில் வினைத்திறன் காண் தடைப் பரீட்சையினை பூர்த்தி செய்திராத அலுவலர்கள் க.பொ.த (சா.த) பரீட்சையில் ஆங்கிலப் பாடத்தில் சித்தியெய்திருப்பின் குறித்த வினைத்திறன் காண் தடைப் பரீட்சையில் ஆங்கிலப் பாடத்தில் சித்தியெய்தும் தேவைப்பாட்டிலிருந்து விடுவிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

02. அதற்கிணங்க, முதலாம் வினைத்திறன் காண் தடைப் பரீட்சையில் ஆங்கில மொழியில் சித்தியடையாத அலுவலர்களை உள்ளீர்ப்புச் செய்வதற்காக, அவ்அலுவலர்களின் கல்விப் பொதுத் தராதர சாதாரண தரச் சான்றிதழ் பத்திரத்தின் (நிறுவனத் தலைவரின் உத்தியோகபூர்வ இறப்பர் முத்திரையுடன்) சான்றுப்படுத்திய பிரதியொன்றை அவ் அலுவலர்களின் நியமன/ உள்ளீர்ப்பு இலக்கத்தினையும் (உதாரணம் :- CS/DOS/A/XXXXX) குறிப்பிட்டு எனக்கு அனுப்பி வைக்குமாறு தயவுடன் கேட்டுக் கொள்கின்றேன்.

**ஒப்பம்./ கே.வீ.பீ.எம்.ஜே. கமகே**
**இணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகம்**